**02.07.2015**

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வைகை அணை நீர்மட்டம் உயர்வு

ஆண்டிபட்டி: நீர்வரத்து அதிகரித்ததால் வைகை அணையின் நீர் மட்டம் மூன்று நாளில் 2 அடி உயர்ந்துள்ளது.கேரளாவில் பெய்யும் தென்மேற்கு பருவ மழையால் பெரியாறு அணைக்கான நீர் வரத்தும் அதிகரித்து உள்ளது. பெரியாறு அணையில் இருந்து தற்போது தேனி மாவட்ட பாசனத்திற்காக வினாடிக்கு 1300 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது. இந்த நீரில் தற்போது வினாடிக்கு 739 கன அடி நீர் வைகை அணைக்கு வந்து சேர்கிறது. நீர்வரத்து தொடர்ந்து அதிகரிப்பதால், அணை நீர் மட்டமும் உயர்ந்து வருகிறது. ஜூன் 28 ல் 45.08 அடியாக இருந்த நீர் மட்டம் நேற்று 47.21 அடியாக உயர்ந்தது. அணை உயரம் 71 அடி. அணையில் இருந்து மதுரை, ஆண்டிபட்டி-சேடபட்டி குடிநீருக்காக வினாடிக்கு 60 கன அடிநீர் திறக்கப்பட்டுள்ளது. வைகை அணையின் நீர் இருப்பு 1446 மில்லியன் கனஅடியாக உள்ளது.-

## சென்னையில் நேற்று 102 டிகிரி வெயில்

சென்னை: சென்னை உள்ளிட்ட நகரங்களில், நேற்று, 39 டிகிரி செல்ஷியஸ் வெப்பம் பதிவானது.

'இந்த மாதம், முதல் வாரத்துக்கு மேல், கோடை வெப்பம் அதிகரிக்கும்' என, சென்னை வானிலை மையம் ஏற்கனவே கணித்திருந்தது. ஆனால், மாதத்தின் முதல் நாளே, வெப்பம், 39 டிகிரி செல்ஷியஸ், அதாவது 102

டிகிரி பாரன்ஹீட்டை எட்டியுள்ளது. சென்னை, நெல்லை, திருச்சி மற்றும் புதுச்சேரி யில், நேற்று, 102 டிகிரி பாரன்ஹீட் வெப்பம் பதிவானது. வேலுாரில் இயல்புக்கு மாறாக, வெப்பநிலை குறைந்து, 97 டிகிரி பாரன்ஹீட்டாக இருந்தது. 'நேற்றைய வெப்பநிலையே, இந்த வாரம் முழுவதும் நீடிக்கும்' என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## மேட்டூர் நீர் வரத்து அதிகரிப்பு: கபினி உபரிநீர் திறப்பு குறைப்பு

மேட்டூர் : மேட்டூர் அணை நீர்வரத்து அதிகரித்துள்ள நிலையில், நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் குறைந்ததால், கபினி உபரி நீர்திறப்பு குறைக்கப்பட்டது.காவிரி நீர்பிடிப்பு பகுதியில் தீவிரம் அடைந்த பருவமழையால் கர்நாடகாவிலுள்ள, கபினி அணை நிரம்பியதால், உபரி நீர் மேட்டூர் அணைக்கு திறக்கப்பட்டது. இருநாட்களுக்கு முன், கபினியில் அதிகபட்சமாக வினாடிக்கு, 30,000 கனஅடி நீர்திறக்கப்பட்டது.இந்த நீர் வந்து சேர்ந்ததால் நேற்று முன்தினம் வினாடிக்கு, 11,308 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 28,600 கனஅடியாக அதிகரித்தது. நேற்று அணை நீர்மட்டம், 80.250 அடியாகவும், நீர் இருப்பு, 42.206 டி.எம்.சி.,யாகவும் இருந்தது.வினாடிக்கு, 1,000 கனஅடியாக இருந்த நீர்திறப்பு, செக்கானுார் கதவணையில் நீர்தேக்கியதால், 500 கனஅடியாக குறைக்கப்பட்டது. இந்நிலையில், காவிரி நீர்பிடிப்பு பகுதியில் பருவமழை தீவிரம் குறைந்ததால், நேற்று கபினி நீர்வரத்து, 10,000 கனஅடியாக குறைந்தது.நீர்வரத்து குறைந்ததால், நேற்று முன்தினம் வினாடிக்கு, 18,000 கனஅடியாக இருந்த கபினி உபரி நீர்திறப்பு நேற்று, 10,000 கனஅடியாக குறைக்கப்பட்டது. இதனால், வரும் நாளில் மேட்டூர் அணை நீர்வரத்து படிப்படியாக குறையும்.

## தினமும் நாய்க்கு பால் கொடுக்கும் வெள்ளாடு



முதுகுளத்தூர்: முதுகுளத்தூர் அருகே ஆப்பனூரில், தினமும் நாய்க்கு பால் கொடுக்கும் வெள்ளாட்டை பொது மக்கள் வியப்புடன் பார்த்து செல்கின்றனர். முதுகுளத்தூர் அருகே உள்ள ஆப்பனூர் அரிய நாதபுரத்தைச் சேர்ந்த விவசாயி முருகேசன். இவர் வளர்த்து வரும் வெள்ளாடு சமீபத்தில் குட்டிகளை ஈன்றது. அந்த குட்டிகள் தாய் ஆட்டிடம் பால் குடிக்கும் போது, முருகேசன் வளர்க்கும் நாயும், ஆட்டுக் குட்டி போல் வெள்ளாட்டிடம் பால் குடித்து வருகிறது. இதுகுறித்து முருகேசன் கூறுகையில், ""மேய்ச்சலுக்கு சென்ற ஆடு, வீடு திரும்பியவுடன் தான் ஈன்ற குட்டிகளுக்கு பால் கொடுக்கும் முன், நாய்க்கு பால் கொடுக்கிறது. பின்பு தான் தனது குட்டிகள் பாலை குடிக்க ஒத்துழைக்கிறது. நாயும் ஆடு வந்தவுடன், தாயை பார்த்த குழந்தை ஓடுவதைபோல், ஓடோடி சென்று பால் குடித்துவிட்டு, சிறிதுநேரம் ஆட்டுடன் விளையாடுகிறது," என்றார்.

## கேரள காய்கறி பயிர்களுக்கு திண்டுக்கல் இயற்கை உரம்

திண்டுக்கல்: கேரளாவின் வீட்டுத்தோட்டங்கள், காய்கறி தோட்டங்களுக்கு, திண்டுக்கல்லிருந்து இயற்கை உரம் அனுப்பி வைக்கப்படுகிறது.திண்டுக்கல் சிலுவத்துார் ரோட்டில் உள்ளது கம்பிளியம்பட்டி. இங்குள்ள இயற்கை விவசாயி காளியப்பன், 48. இவருக்கு சொந்தமான 3 ஏக்கர் தென்னந்தோப்பில், 100 செம்மறி ஆடுகள், நாட்டுக் கோழிகள் வளர்த்து வருகிறார். இதில், தினமும் சேரும் ஆடுகளின் கழிவுகளை சேகரிக்கிறார். சேகரித்த கழிவுகளை 10 அடி நிலப்பரப்பில் பரப்புகிறார். 'அடிக்கடி கிளறிவிட்டு' 4 நாட்கள் பதப்படுத்தி நீர் தெளிக்கிறார். நீரின் ஈரப்பதம் இருநாட்களும், சூரிய வெப்பம் 2 நாட்களும் சேர்த்து 48 மணி நேரம் பதப்படுத்திய இயற்கை உரம் தயாராகிறது. இதை 35 கிலோ மூடையில் அடைத்து ரூ.55க்கு கேரள வியாபாரிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த 10 ஆண்டுகளாக திண்டுக்கல்லில் இருந்து, கேரளாவின் பாலக்காடு, சித்துார், கோட்டயம் உள்ளிட்ட பகுதி

களுக்கு அனுப்பப்படுகிறது. விவசாயி காளியப்பன் கூறுகையில், 'செம்மறி ஆடுகள்கழிவுகளோடு, ஆட்டின் முடிகளும் மக்கி கழிவுகளாக மாறுவதால், இயற்கை சத்துக்கள், நுண்ணாட்டச் சத்துக்கள் அதிகரிக்கிறது. இதை பதப்படுத்தி, வாரம் இருமுறை டெலிவரி செய்கிறோம், என்றார். '97862 - 96145' என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

## நெற்பயிரில் இலைப்பேன் பூச்சி தாக்கு

பொன்னேரி: குறுவை சாகுபடிக்கு நெல் பயிரிடப்பட்டுள்ள விளை நிலங்களில், இலைப்பேன் பூச்சி தாக்குதலால், விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

மீஞ்சூர் ஒன்றியத்தில், மேட்டு பாளையம், சின்னகாவனம் பெரும்பேடு, தேவராஞ்சேரி, மெதுார், திருப்பாலைவனம் உள்ளிட்ட கிராமங்களில், 13,932 ஏக்கர் பரப்பளவில், குறுவை சாகுபடிக்காக நெல் பயிரிடப்பட்டுள்ளது. முதற்கட்ட களைப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், மேற்கண்ட நெற்பயிரில் இலைப்பேன் பூச்சி தாக்குதல் துவங்கி உள்ளது. இதனை கட்டுப்படுத்த முடியாமல், விவசாயிகள் தவிப்பிற்கு ஆளாகி உள்ளனர்.இதுகுறித்து, மீஞ்சூர் ஒன்றிய வேளாண்மை உதவி இயக்குனர் ரேவதி கூறியதாவது: அதிக வெப்பம், திடீர் குளிர்ச்சி என, தட்பவெப்ப நிலை மாற்றத்தால், இலைப்பேன் பூச்சி தாக்குதல் ஒரு சில இடங்களில் உள்ளன. அதிக வெப்பத்தினாலும், இந்த பூச்சி தாக்குதல் இருக்கும்.விளைநிலங்களில் ஈரப்பதத்தினை தக்க வைத்துக் கொள்வதால் கட்டுப்படுத்தலாம்.தென் மேற்கு பருவமழை, கடந்த ஒரு வாரத்திற்கு முன்னரே துவங்கி இருக்க வேண்டும். மழை பெய்தால், இந்த தாக்குதல் குறைந்துவிடும்.விவசாயிகளுக்கு நேரில் சென்று, ஆலோசனைகளை வழங்கி வருகிறோம். இவ்வாறு, அவர் கூறினார். பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த, கீழ்க்கண்ட மருந்தினங்களில் ஏதாவது ஒன்றினை, 20 நாட்கள் இடை வெளியில் பயன்படுத்தும்படி, வேளாண் துறை அறிவுறுத்தி உள்ளது.ஒரு ஏக்கருக்கு, 400 மி.லி., வேப்ப எண்ணெயை, 100 லிட்டர்தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.ஒரு ஏக்கருக்கு, 40 கிராம், தையோமீத்தாக்சைம் மருந்தினை,100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.ஒரு ஏக்கருக்கு, 50 கிராம், பாஸ்போமிடான் 40 எஸ்.எல்., மருந்தினை, 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.ஒரு ஏக்கருக்கு, 300 கிராம் அசிப்பேட் மருந்தினை, 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

மேலும் விவரங்களுக்கு: வேளாண்மை அலுவலர் - 88833 68510
வேளாண்மை உதவி இயக்குனர் - 94443 67016

**தோட்டக்கலை துறை திட்டங்கள்; விவசாயிகளுக்கு பயிற்சி முகாம்**

விழுப்புரம் : விழுப்புரம் மாவட்டத்தில் தோட்டக்கலை துறை திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நாளை (3ம் தேதி) துவங்குகிறது. இது குறித்து தோட்டக்கலை துணை இயக்குநர் ரவி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:விழுப்புரம் மாவட்டத்தில் இந்தாண்டு தோட்டக்கலை மூலம் செயல்படுத்தவுள்ள திட்டங்கள், மானியம், இடுபொருட்கள் விபரங்களை விவசாயிகள் அறிந்து கொள்வது மட்டுமின்றி பயன்பெறும் வகையில் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்கள் மூலம் அந்தந்த வட்டாரத்தில் விழிப்புணர்வு முகாம் நடக்க உள்ளது.இந்த மாவட்டத்தில் தேசிய வேளாண்மை அபிவிருத்தி, மானாவரி பகுதி மேம்பாடு, தேசிய மூலிகை பயிர்கள் இயக்கம், நுண்ணீர் பாசனம், பசுமை குடில், நிழல்வலை குடில், குறைந்த விலையில் வெங் காயம் சேமிப்பு கிடங்கு அமைத்தல், தேனீ வளர்ப்பு, புதிய பரப்பு விரிவாக்கம் திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளது.இந்த முகாம் கோலியனூர், காணை, கண்டமங்கலம், விக்கிரவாண்டி, வானூர், செஞ்சி, வல்லம், மேல்மலையனூர், மரக்காணம், மயிலம், ஒலக்கூர், திருக்கோவிலூர், முகையூர், திருவெண்ணெய்நல்லூர், உளுந்தூர்பேட்டை, திருநாவலூர், கள்ளக்குறிச்சி, சின்னசேலம், தியாகதுருகம், சங்கராபுரம், ரிஷிவந்தியம், வெள்ளிமலை ஆகிய வட்டாரங்களில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையத்தில் நாளை முதல் 4 மற்றும் 6 ஆகிய தேதிகளில் நடக்கிறது.முகாம் காலை 11:00 மணி முதல் மாலை 2:00 மணி வரை நடக்கிறது. இதில் விவசாயிகள் பங்கேற்று தங்களுக்கு தேவை யான திட்டங்களுக்கு விண் ணப்பம் பெற்று மூதுரிமை பட்டியல் சேர்த்து பயன்பெறலாம்.இவ்வாறு தோட்டக்கலை துணை இயக்குநர் ரவி தெரிவித்துள்ளார்.

## தோட்டக்கலை திட்டங்களை பயன்படுத்த ஆர்வம்

ஊட்டி:தோட்டக்கலை துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களை பயன்படுத்தி கொள்ள, விவசாயிகள் ஆர்வம் காட்டினர்.

நீலகிரி மாவட்டத்தில், தோட்டக்கலை துறை மூலம் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து விவசாயிகள் அறியாமல் உள்ளனர். 'அத்திட்டங்களை விவசாயிகள் பெற்று பயனடைய வேண்டும்' என்ற நோக்கில், தோட்டக்கலை துறை சார்பில், 'விண்ணப்ப மேளா' நடத்தப்படுகிறது. நேற்று, ஊட்டி தோட்டக்கலை வளாகத்தில் நடந்த முகாமை, மாவட்ட கலெக்டர் சங்கர் துவக்கி வைத்து பேசுகையில்,“இத்தகைய முகாம்களில் பங்கேற்று, தோட்டக்கலை துறையின் திட்டங்களை பெற்றுக் கொள்வதன் மூலம், தாமதங்கள் தவிர்க்கப்படும்,” என்றார்.

தோட்டக்கலை இணை இயக்குனர் மணி பேசுகையில், “ஒருங்கிணைந்த தோட்டக்கலை வளர்ச்சி இயக்க திட்டத்தின் கீழ், புதிய தோட்டம் அமைத்து, உயர்ரக காய்கறி சாகுபடி செய்ய பூண்டு, குறுமிளகு சாகுபடி செய்ய, பசுமைக் குடில் அமைக்கவும், தோட்டக்கலை இயந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ் விசை உழவு இயந்திரம், மினி டிராக்டர் வாங்க மானியம் வழங்கப்படுகிறது. தவிர, காளான் வளர்ப்பு உட்பட பல்வேறு திட்டங்கள் மானிய உதவியுடன் வழங்கப்படுகிறது,” என்றார்.

இந்த விண்ணப்ப மேளா, இன்று(உம் தேதி) கூடலுார் தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகம், 3ம் தேதி, குன்னுார் சிம்ஸ்பூங்கா தோட்டக் கலை உதவி இயக்குனர் அலுவலகம், 4ம் தேதி, கோத்தகிரி தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகங்களில், காலை முதல் மாலை வரை நடத்தப்படும்.

சிறு விவசாயிகளுக்கு சாத்தியமே...:'இந்த முகாமில், 'பணக்கார' விவசாயிகள் தான், அதிகளவில் பங்கேற்று, மானிய விண்ணப்பங்களை பெற்று கொண்டனர்' என்ற சர்ச்சை எழுந்தது. இதுகுறித்து, தோட்டக்கலை இணை இயக்குனர் மணி கூறுகையில்,“சாதாரண, சாமானிய விவசாயிகளும், அரசின் மானிய உதவிகளை பெற வேண்டும்; அவர்களுக்கும் தோட்டக்கலை துறையின் திட்டங்கள் குறித்து தெரிய வேண்டும் என்ற நோக்கில் தான் இந்த முகாம் நடத்தப்படுகிறது. இதல், ஏராளமான சிறு விவசாயிகள் பங்கேற்று பயனடைந்து வருகின்றனர்,” என்றார்.

## தோட்டப்பயிர் திட்டங்களில் பலனடைய நெற்குப்பையில் இன்று விவசாயிகள் பதிவு

திருப்புத்தூர்:திருப்புத்தூர் வட்டார விவசாயிகள் தோட்டக்கலைத்துறையின் பல்வேறு திட்டங்களின் பயன்களை பெற பதிவு செய்ய நெற்குப்பையில் முகாம் நடத்தப்படுகிறது.

தோட்டக்கலைத்துறையின் கீழ் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் மா அடர் மற்றும் சாதா நடவு, கொய்யா,மா சாதா நடவு, வீரிய ஒட்டுக் காய்கறி செடிகள் பெறவும், மண்புழு உரக்கூடம் தயாரித்தல், பறவைத் தடுப்பு வலை, களை தடுப்பு விரிப்பு பெறுதல் மற்றும் ஆர்.ஏ.டி.பி.,திட்டத்தின் கீழ் மா,காய்கறி நடவு, சிறு விவசாயிகள் 100 சதவீத மானியத்திலும் பிற விவசாயிகள் 75 சதவீதி மான்யத்தில் சொட்டுநீர்ப்பாசனம் போன்ற திட்டங்கள் ஆண்டு முழுவதும் வழங்கப்படுகிறது.

இத்திட்டப் பலன்களைப் பெற விவசாயிகள் இன்று பதிவு செய்யப்படுகின்றனர்.

உதவி இயக்குநர் அழகுமலை கூறுகையில், "நெற்குப்பையில் ராம.சா.திருமண மண்டபத்தில் இன்று காலை 10 மணிக்கு பயனாளிகள் பதிவு துவங்கும். தோட்டப்பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகள் ரேஷன் கார்டு, 10(1), போட்டோ ஆகியவற்றுடன் வந்து பதிவு செய்து கொள்ளலாம்' என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மாற்றுப் பயிர் சாகுபடியில் வருமானத்தை அள்ளித் தரும் கனகாம்பரம்**



மாற்றுப் பயிர் சாகுபடியில் விவசாயிகளுக்கு அதிக வருமானம் தரும் பயிர்களில் ஒன்றாக கனகாம்பரம் திகழ்கிறது. புதுச்சேரி அரசு வேளாண் துறையின் கீழ் காலாப்பட்டு பண்ணை தகவல் மற்றும் ஆலோசனை மையத்துக்கு உள்பட்ட கனகசெட்டிகுளத்தைச்

சேர்ந்த விவசாயி தனசேகரன், கனகாம்பரத்தை மாற்றுப் பயிராக சாகுபடி செய்தார்.

இதில் குறைந்த நீர் மற்றும் நிலப்பரப்பில் அதிக வருமானத்தைப் பெற்றுள்ளார். மேலும், சந்தைப்படுத்துதலும் எளிதாக இருந்தாகவும் தனசேகரன் தெரிவித்துள்ளார். எனவே, விவசாயிகள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ள தொழில் நுட்பங்களை கடைபிடிப்பதன் மூலம் அதிக லாபம் பெறலாம் என வேளாண் அலுவலர் அனுப்குமார் தெரிவித்துள்ளார். ரகங்கள்: சிவப்பு, ஆரஞ்சு, தில்லி கனகாம்பரம். மண் மற்றும் தட்பவெப்பநிலை: நல்ல வடிகால் வசதியுள்ள மணல் கலந்த வண்டல் மண் மற்றும் செம்மண் ஏற்றது. மண்ணின் அமில காரத் தன்மை 6 முதல் 7.5க்குள் இருக்க வேண்டும். கனகாம்பரம் செடிகள் ரளவு நிழலைத் தாங்கி வளரும். பருவம்: ஆண்டு முழுவதும் பயிர் செய்யலாம். மழைக் காலத்தில் நடக்கூடாது. நிலம் தயாரித்தல்: நிலத்தை இரண்டு அல்லது மூன்று முறை நன்கு உழுது பண்படுத்தவேண்டும். கடைசி உழவின் போது எக்டேருக்கு 25 டன் மக்கிய தொழு எரு இட்டு, மண்ணுடன் நன்கு கலந்துவிட வேண்டும். பின்னர் தேவைக் கேற்ப பார்கள் அமைக்க வேண்டும்.

**விதையும் விதைப்பும்**

இனப்பெருக்கம்: டெல்லி கனகாம்பரம் ரகத்தை வேர் வந்த குச்சிகள் மூலம் இனப்பெருக்கம் செய்யலாம்.

**விதையளவு:** 5 கிலோ/எக்டர் இடைவெளி: விதைக்காக பயிரிடுவதாக இருந்தால் 60 - 60 செ.மீ இடைவெளியைப் பின்பற்றவும். டெல்லி கனகாம்பரம் ரகத்துக்கு 60 - 40 செ.மீ. இடைவெளி. நாற்றாங்கால் தயாரித்தல்: தேவையான அளவுகளில் மேடைப்பாத்திகள் அமைத்து அவற்றில் ஒரு செ.மீ. ஆழத்தில் விதைகளை விதைத்து, பின்னர் அவற்றை மணல் கொண்டு மூடிவிட வேண்டும்.

விதைகள் முளைக்கும் வரை தினமும் நீர்ப்பாய்ச்ச வேண்டும். விதைகள் விதைத்த 60-ம் நாளில் நடவுக்குத் தயாராகிவிடும்.

நடவு செய்தல்: 60 நாள்கள் ஆன நாற்றுக்களைப் பறித்து, 60 செ.மீ. இடைவெளியில் அமைக்கப்பட்டுள்ள பார்களில் நடவு செய்ய வேண்டும். நடும் முன் நாற்றுக்களை எமிசான் (1 கிராம் - லிட்டர்) கரைசலில் நனைத்து நடவேண்டும். நடவு செய்ய ஜூலை, செப்டம்பர் மற்றும் அக்டோபர் வரையிலான பருவங்கள் ஏற்றதாகும்.

நீர் நிர்வாகம்:

ஏழு நாள்களுக்கு ஒருமுறை நீர்பாய்ச்ச வேண்டும்.

நிலத்தில் நீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நிலத்தில் ஈரத்தன்மை அதிகமாக இருந்தால் வேர் அழுகல் நோய் தோன்றக்கூடும். எனவே சீராக நீர்பாய்ச்ச வேண்டும்.

**ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை**

அடியுரமாக எக்டேருக்கு 25 டன் தொழு உரம் கடைசி உழவின் போது இடவேண்டும். செடிகள் நட்ட மூன்று மாதங்கள் கழித்து எக்டருக்கு 75 கிலோ தழைச்சத்து, 50 கிலோ மணிச்சத்து, 125 கிலோ சாம்பல் சத்து கொடுக்கக் கூடிய ரசாயன உரங்களை இட வேண்டும். மேற்கண்ட உர அளவை மீண்டும் ஒவ்வொரு ஆறு மாத இடைவெளியில் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு இரண்டு ஆண்டுகள் வரை தொடர்ந்து இடவேண்டும்.

உயிர் உரமாகிய அசோஸ்பைரில்லத்தை ஒரு எக்டேருக்கு 2 கிலோ என்ற அளவில் பயன்படுத்தலாம். செடிகள் நட்ட மூன்று மாதங்கள் கழித்து அஸ்கார்பிக் அமிலம் 1,000 பிபிஎம் என்ற அளவில் தெளித்தால் மகசூல் அதிகரிக்கும்.

தில்லி கனகாம்பரத்துக்கு: செடிகள் நட்ட 30 நாள்கள் கழித்து எக்டேருக்கு வேப்பம் புண்ணாக்கு 250 கிலோ, தழைச்சத்து 40 கிலோ

கொடுக்கக்கூடிய உரங்களை இடவேண்டும். பிறகு 90 நாள்கள் கழித்து 40:20:20 கிலோ என்ற விகிதத்தில் தழை, மணி, சாம்பல் சத்து கொடுக்கக்கூடிய ராசயன உரங்களை 3 மாதங்களுக்கு ஒரு முறை கொடுக்க வேண்டும்.

**ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு**

நூற்புழு: நூற்புழுக்கள் மண்ணில் இருந்தால் செடிகளின் வளர்ச்சி குன்றி இலைகள் வெளிறி மகசூல் பாதிக்கப்படும். நூற்புழு தாக்குதலைத் தடுக்க, நூற்புழு தாக்குதல் இல்லாத மண்ணில் கனகாம்பரம் சாகுபடி செய்ய வேண்டும். நிலத்தில் ஈரம் இருக்கும்போது செடிகளின் வேர் பகுதியில் போரேட் அல்லது கார்போப்யூரான் குறுணை மருந்தினை இடவேண்டும்.

அசிவினிப் பூச்சிகள்: இவை இலைகளில் அடை அடையாக ஒட்டிக் கொண்டு சாற்றினை உறிஞ்சி சேதம் விளைவிக்கும். இவற்றைக் கட்டுப்படுத்த டைமித்தோயேட் மருந்தினை ஒரு லிட்டர் நீருக்கு ஒரு மில்லி வீதம் கலந்து தெளிக்கவேண்டும்.

**நோய்கள்**

வாடல் நோய்: இந்நோயின் தாக்குதலினால் செடிகள் நுனிப் பகுதியிலிருந்து வாடி படிப்படியாக செடி முழுவதும் காய்ந்துவிடும். நோயின் அறிகுறிகள் தென்பட்டவுடன் எமிசான் மருந்தினை லிட்டர் நீருக்கு ஒரு கிராம் வீதம் கரைத்து செடிகளைச் சுற்றி வேர் பாகத்தில் ஊற்றிவிட வேண்டும். அறுவடை: நாற்றாங்காலில் இருந்து செடிகள் நட்ட ஒரு மாதம் கழித்து பூக்க ஆரம்பித்து விடும். நன்கு மலர்ந்த மலர்களை இரண்டு நாள்களுக்கு ஒரு முறை பறிக்க வேண்டும்.

மகசூல்: ஒரு எக்டேருக்கு ஒரு ஆண்டில் 2,000 கிலோ மலர்கள் கிடைக்கும். டெல்லி கனகாம்பரம் ரகம் ஒரு எக்டேருக்கு ஒரு ஆண்டில் 2,800 கிலோ மலர்கள் கொடுக்கும்.

**மண் பரிசோதனையால் அதிக மகசூல் பெறலாம்**



மண் பரிசோதனை செய்து அதன்படி விளைநிலங்களுக்கு உரமிட்டு அதிக மகசூல் பெறலாம். இதுகுறித்து மேற்கு ஆரணி வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி கூறியதாவது: மண் பரிசோதனை செய்வதன் மூலம் விவசாயிகள் தங்களுடைய விளைநிலத்தின் மண் வளம், தன்மைகளைப் புரிந்துகொள்ள முடியும். எந்த வகையான தானியங்களைப் பயிர் செய்ய முடியும். என்ன வகையான உரமும், ஊட்டச் சத்தும் மண்ணுக்குத் தேவைப்படுகிறது போன்ற நுணுக்கங்களைத் தெரிந்துகொள்ள முடியும். மண் அரிப்பு, மண் வளம் குன்றுதல் போன்றவற்றை அறிய மண் பரிசோதனை மிக அவசியம். பயிர் அறுவடைக்குப் பிறகும் கூட நாம் மண் பரிசோதனை செய்வதன் மூலம் தற்போதைய மண்ணின் வளத்தை அறிய முடியும். பொருளாதார அடிப்படையில் மண் பரிசோதனை செய்வதன் மூலம் தேவைக்கு அதிகமான உரமிடுதலைத் தடுக்க முடியும். அதிகம் வருவாய் தரக்கூடிய பயிர்களைத் தெரிவு செய்து விவசாயம் செய்ய முடியும். அனைத்து மாவட்டங்களிலும் மண் பரிசோதனை செய்துகொள்ள தமிழக வேளாண்மை மேம்பாட்டுக் கழகம் வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. கிராம அலுவலர்களிடம் தேவையான விவரங்களை அறிந்து கொள்ளலாம். மண் வள அட்டை: மண் மாதிரி எடுத்து ஆய்வு

செய்து, மண்வள அட்டை பெற்று, அதிகாரிகள் ஆலோசனைபடி உரமிட்டால் அதிக மகசூல் பெறலாம்.

விவசாயிகளின் நலன் மண்ணின் வளத்தைப் பொருத்தே அமைகிறது. பயிர் சாகுபடி செய்வதால் ஏற்படும் சத்துக் குறைபாடுகளைச் சரியான உர நிர்வாகத்தின் மூலம் சரிசெய்ய வேண்டியது அவசியம். சரியான உர நிர்வாகத்துக்கு முதலில் மண் பரிசோதனையே அடிப்படையாகும்.

சத்துகளின் அளவு வேறுபடுவதாலும், சத்துகளின் தேவை மாறுபடுவதாலும் மண் பரிசோதனையின் மூலமே பயிருக்கு ஏற்ப சரியான உர சிபாரிசு வழங்க முடியும். அதன்மூலம் தேவையான அளவு மட்டுமே உரமிடுவதால் குறைந்த செலவில் கூடுதல் மகசூல் பெறுவதோடு அதிகப்படியான உரச்செலவையும் குறைக்கலாம். மண்ணின் தன்மைகளை அறியவும், களர், உவர், அமில நிலங்களை சீர்திருத்தவும் பயிருக்குக் கிடைக்க வேண்டிய சத்துகளின் அளவை அறிந்து அதற்கேற்ப உரமிடவும் மண் பரிசோதனை மிகவும் அவசியமாகிறது. ஆண்டுக்கு ஒரு முறை மண் மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்ய வேண்டும். நெல், சோளம், பயறுவகைகள், எண்ணெய் வித்துகள் போன்ற பயிர்கள் சாகுபடி செய்ய அந்த நிலத்தில் 15 செ.மீ. ஆழத்திலும், கரும்பு, வாழை, போன்ற பயிர்கள் சாகுபடி செய்ய 30 செ.மீ. ஆழத்திலும், பழந்தோட்டப் பயிர்களாக இருந்தால் 3 அடி ஆழத்திலும் மேல் மண்ணை தவிர்த்து விடமால் "வி' வடிவில் வெட்டி சரிவு மண்ணை அப்புறப்படுத்திய பின் "வி' வடிவில் மேலிருந்து மண்ணைச் சுரண்டி எடுத்தல் வேண்டும். ஒரு வயலில் சுமார் 10 முதல் 12 இடங்களில் எடுத்து நன்கு கலக்கி குவாட்டரிங் முறையில் அரை கிலோ வரும்படி ஒரு துணிப்பையில் எடுத்து கொள்ள வேண்டும். சேகரித்த மண் மாதிரிகளை தனித்தனியாகக் கட்டிச் சுத்தமான

துணிப்பைகளிலோ அல்லது பாலித்தீன் பைகளிலோ போட்டு உரிய அடையாளமிட்டு, விவசாயியின் பெயர், முகவரி, நிலத்தின் பெயர், சர்வே எண், அடையாளம், வட்டாரத்தின் பெயர், உர சிபாரிசு கோரப்படும் பயிர், பாசன நீரின் தன்மை, முன் சாகுபடி செய்த பயிர் போன்ற விபரங்களுடன் மண் பரிசோதனை நிலையத்துக்கு அனுப்ப வேண்டும். விவசாயிகள் சரியான தருணத்தில் மண் சோதனை செய்து மண்வள அட்டை பெற்று கொள்ள வேண்டும். அந்த அட்டையில் பரிந்துரைத்துள்ளபடி உரமிட்டு அதிக மகசூல் பெறலாம் என்றார் சாந்தி.

**தமிழகத்தில் இன்று மழை வாய்ப்பு**

தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது: கடந்த 24 மணி நேரத்தில், மானாமதுரை, ஆடுதுறையில் 50 மி.மீ, விருதுநகர், இளையான்குடி, திருப்புவனம், மதுரை விமான நிலையம் ஆகிய இடங்களில் 40 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. வெப்பச் சலனம் காரணமாக தமிழகம், புதுச்சேரியில் வியாழக்கிழமை ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில், மாலை அல்லது இரவு நேரத்தில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். மாநகரின் வெப்ப நிலையைப் பொருத்த வரை, குறைந்தபட்சம், அதிகபட்சம் முறையே 80, 102 டிகிரி ஃபாரன்ஹீட்டாக இருக்கும் என்றார் அவர்.

**ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து காலையில் அதிகரிப்பு; மாலையில் குறைவு**

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரி ஆற்றில் புதன்கிழமை 23,000 கன அடியாக இருந்த நீர்வரத்து, மாலையில் குறையத் தொடங்கியது. கர்நாடக மாநிலத்தில் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்துவரும் மழை காரணமாக அங்குள்ள அணைகளில் இருந்து கூடுதல் நீர் திறக்கப்பட்டதால், ஒகேனக்கல்லில் நீர்வரத்து அதிகரித்துக் காணப்பட்டது. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை 4,500 கன அடியாக இருந்த நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து புதன்கிழமை காலை 23,000 கன அடியாக இருந்தது. இதன்காரணமாக பிரதான அருவிக்குச் செல்லும் நடைபாதையைத் தொட்டபடி சென்ற தண்ணீர் அருவியில் ஆர்ப்பரித்துக் கொட்டியது. இந்த நிலையில், நீர் வரத்து மாலையில் 21,000 கன அடியாகக் குறைந்தது.

**ஜூலை 5இல் தோட்டப் பயிர் சாகுபடி மானியத்துக்கு விண்ணப்பிக்க சிறப்பு முகாம்**

தேனி மாவட்டத்தில் அனைத்து வட்டாரங்களிலும் உள்ள தோட்டக் கலை உதவி இயக்குநர் அலுவலகங்களில், தோட்டப் பயிர் சாகுபடி விவசாயிகள் அரசு மானிய உதவி பெறுவதற்கு விண்ணப்பிக்க ஜூலை 5ஆம் தேதி சிறப்பு முகாம் நடைபெறுகிறது.

இது குறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிவிப்பு: தோட்டக்கலைத் துறை மூலம் தேசிய தோட்டக் கலை இயக்கம், சொட்டுநீர் பாசனம், மானாவாரி தோட்டக் கலை அபிவிருத்தித் திட்டம், தேசிய மூலிகைப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின் கீழ் தோட்டப் பயிர் சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மானிய உதவி வழங்கப்படுகிறது.

இத் திட்டங்களின் கீழ் அரசு மானிய உதவி பெறுவதற்கு விவசாயிகள் விண்ணப்பிக்க, அனைத்து வட்டாரங்களிலும் உள்ள தோட்டக் கலை உதவி இயக்குநர் அலுவலகங்களில் ஜூலை 5ஆம் தேதி காலை 10 மணிக்கு சிறப்பு முகாம் நடைபெறுகிறது. தோட்டப் பயிர் சாகுபடி விவசாயிகள் தங்களது புகைப்படம், நிலத்தின் சிட்டா, அடங்கல் ஆகியவற்றுடன் முகாமில் கலந்து கொண்டு அரசு மானிய உதவி பெற விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**முருங்கை விலை கடும் வீழ்ச்சி**

காங்கயம் பகுதில் கடந்த 10 நாள்களில், முருங்கைக்காய் விலை கிலோ ரூ. 135-இல் இருந்து ரூ. 25 ஆக சரிவடைந்துள்ளது.

காங்கயம், குண்டடம் பகுதிகளில் நிகழாண்டில் பல ஏக்கர் பரப்பளவில் முருங்கைக்காய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. முருங்கைக்காய்கள், உள்ளூர் வியாபாரிகள் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு மும்பை, கொல்கத்தா உள்ளிட்ட வடமாநிலங்களுக்கும், கோவை, சென்னை, திருச்சி, மதுரை உள்ளிட்ட தமிழகத்தின் பிற பகுதிகளுக்கும் விற்பனைக்காக அனுப்பட்டு வருகின்றன.

முருங்கையில் இரண்டு வகைகள் உள்ளன. மர முருங்கை பல ஆண்டுகளுக்கு பலன் தரும். மார்ச், ஏப்ரல் மாதங்கள் இதன் அறுவடைக் காலமாகும்.

செடி முருங்கைக்கு தற்போது அறுவடைக் காலமாகும். கடந்த 20 நாள்களுக்கு முன் இதன் அறுவடை தொடங்கியது. அப்போது பரவலாக மழை பெய்ததால், செடிகளில் பூக்கள் உதிர்ந்து மகசூல் கணிசமாக குறைந்து. இதனால், முருங்கைக்காய் படிப்படியாக விலை உயர்ந்து ஒரு கிலோ ரூ. 135 வரை இப்பகுதிகளில் கொள்முதல் செய்யப்பட்டது.

இந்நிலையில், படிப்படியாக மழை குறைந்ததால் முருங்கைக்காய் மகசூல் அதிகரிக்கத் தொடங்கியது. இதன் வரத்து அதிகரித்ததால் விலையும் படிப்படியாகக் குறைந்து, கடந்த 10 நாள்களில் கிலோ ரூ. 135-இல் இருந்து ரூ. 25 ஆக குறைந்துள்ளது.

இதுகுறித்து சடையபாளையம் விவசாயி பால்ராஜ் கூறியது:

தற்போது முருங்கைக்காய் வரத்து அதிகரித்துள்ளதன் காரணமாக அதன் விலை குறைந்துள்ளது. மேலும், இதன் விலை குறையும்பட்சத்தில் விவசாயிகளுக்கு லாபம் எதிர்பார்க்க முடியாது. இந்தப் பகுதிகளில் முருங்கை சாகுபடி அதிகளவில் செய்யப்படுவதால், காய்வரத்து அதிகமாக இருக்கும் காலத்தில், அவற்றை பவுடர் செய்யும் விதமாக முருங்கைக்காய் பவுடர் தொழிற்சாலையை இப்பகுதியில் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

**பயிர்க் கடன் வழங்க ரூ.407 கோடி ஒதுக்கீடு**

நடப்பு நிதி ஆண்டில் (2015-16) பயிர்க் கடன் வழங்க ரூ.407 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் கிருஷ்ணராஜ் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் புதன்கிழமை நடைபெற்ற கண்காணிப்பு, ஆய்வுக் குழுக் கூட்டத்தில் அவர் பேசியதாவது:

கடந்த 1.4.2014 முதல் 31.3.2015 வரை மத்திய கூட்டுறவு வங்கியில் வைப்புத் தொகை சேகரிக்க ரூ.1,366.12 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதில், ரூ.1,455.45 கோடி வைப்புத் தொகை சேகரிக்கப்பட்டுள்ளது. 2014-15-ஆம் ஆண்டு பயிர்க் கடன் வழங்க ரூ.388 கோடி நிதி ஒதுக்கப்பட்டது. 31.3.2015 வரை 60,589 பேருக்கு ரூ.394.48 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

2015-16-ஆம் ஆண்டுக்கு ரூ.407 கோடி பயிர்க் கடன் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மத்திய கால விவசாயக் கடன்கள் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் ரூ.23 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் 31.3.2015 வரை ரூ.23.93 கோடி வழங்கப்பட்டுள்ளது.

தானிய ஈட்டுக் கடன் வழங்க மாநிலத்திலேயே அதிக அளவாக ரூ.45 கோடி, ஈரோடு மத்திய கூட்டுறவு வங்கிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 31.3.2015 வரை ரூ.51.07 கோடி வழங்கப்பட்டுள்ளது.

இனிவரும் காலங்களில் கிடங்கு மேம்பாடு, ஒழுங்குமுறை ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கிடங்குகள் மூலம் தானிய ஈட்டுக் கடன் பெறும் சிறு, குறு விவசாயிகளுக்கு 7 சதவீத வட்டி விகிதத்தில் கடன் வழங்கப்படவுள்ளது. இதற்காக 33 சங்கங்களில் ரூ.5.48 கோடி அளவுக்கு 5.20 சதவீத வட்டியில் காசுக் கடன் விண்ணப்பங்கள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளது என்றார்.

இக்கூட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் ச.ராம்தாஸ் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

**முட்டை உற்பத்தி குறைய வாய்ப்பு**

வானிலை மாற்றம் காரணமாக முட்டை உற்பத்தி குறைய வாய்ப்புள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட செய்தி: அடுத்த 3 நாள்கள் வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். மழை பெய்ய வாய்ப்பு இல்லை.

தென்மேற்குப் பருவமழையின் தாக்கம் குறைந்து நிலவுவதால் மேகமூட்டமும், காற்றின் வேகமும் குறைந்து காணப்படும். மேலும், இதுவரை நிலவிய பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் உயர்ந்தும்,

அதன் காரணமாக கோடையை போன்ற வானிலையும் நிலவும். இதனால், கோழிகளில் மீண்டும் தீவன எடுப்பு இயல்பை விட குறைவாகவும், முட்டை உற்பத்தி 2 முதல் 4 சதவீதம் வரை குறையவும் வாய்ப்பு உள்ளது. எனவே, முட்டை உற்பத்தியை தக்க வைத்துக்கொள்ளும் வகையில் கோடைகால தீவன முறையைப் பின்பற்ற வேண்டும்.

**மீன்பிடித் தொழிலை ஊக்குவிக்க அரசு மானியம்**

மீன்பிடித் தொழிலை ஊக்குவிக்க தமிழக அரசு வழங்கி வரும் மானியத்தால் குமரி மீனவர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தமிழகத்தில் சுமார் 4.50 லட்சம் டன் மீன் உற்பத்தி திறன் கொண்ட 3.7 லட்சம் ஹெக்டேர் உள்நாட்டு நீர்வள ஆதாரங்கள் அமையப் பெற்றுள்ளன.

உள்நாட்டு நீர்நிலைகளான குறுகிய, நீண்ட பருவகாலக் குளங்கள், கண்மாய்கள், ஏரிகள், பாசனக் குளங்கள் மற்றும் அதை ஒட்டியுள்ள பகுதிகளில் மீன் உற்பத்தியை பெருக்க பல்வேறு வழிமுறைகள் உள்ளன.

மீன்உற்பத்தியை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழக முதல்வர் பல்வேறு மானியத் திட்டங்களை செயல்படுத்த ஆணையிட்டுள்ளார்.

உள்நாட்டு நீர்நிலைகளில் கூட்டின மீன்வளர்ப்பு, பாசன ஏரி, குளங்களில் நேரிடையாக மீன்குஞ்சுகளை இருப்பு செய்தல், பண்ணைக் குட்டைகளில் மீன்வளர்ப்பு, மீன்குஞ்சு உற்பத்தி நிலையங்கள் அமைத்தல், மீன் குஞ்சு வளர்ப்பு நிலையங்கள் அமைத்தல் ஆகியவற்றுக்கான மானியத் திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்காணும் திட்டங்களை பாசனதாரர்கள் மற்றும் உள்நாட்டு மீன்வளர்ப்போரிடம் பிரபலப்படுத்தும் வகையில் தேசிய வேளாண்

அபிவிருத்தி திட்டம், தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம், மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை, உவர்நீர் மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை ஆகியவற்றின் மூலம் பல்வேறு மானியத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நிவாரணம்: குமரி மாவட்டத்தில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

2011 முதல் 2015 வரை கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமல் போன மீனவர்களின் குடும்பங்களுக்கு தின உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை தினப்படி ரூ. 50 வீதம் மாதம் ரூ. 1,500 வழங்கப்பட்டு வந்தது. தற்போது இத்திட்டத்தில் தின உதவித்தொகையாக தினப்படி ரூ. 250 வீதம் மாதம் ஒன்றுக்கு ரூ.7,500 வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 51 பயனாளிகளுக்கு நிவாரணத்தொகையாக ரூ. 21 லட்சத்து 71 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. மீன்பிடி குறைந்த காலத்தில் ரூ. 4 ஆயிரம் நிவாரணம் வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரை 88,724 பயனாளிகளுக்கு ரூ.35 கோடியே 48 லட்சத்து 96 ஆயிரம் நிவாரணத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த கோவளத்தைச் சேர்ந்த பயனாளி ஸ்டானி சேவியர் (49), கடியப்பட்டினத்தைச் சேர்ந்த பெர்க்மான்ஸ் (59) ஆகியோர் கூறியதாவது:

40 ஆண்டுகளாக மீன்பிடித் தொழில் செய்து வருகிறோம். மீன்வளத்தைப் பெருக்கவும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் அரசு பல்வேறு மானியங்களை வழங்கி வருகிறது. மீன்பிடித் தடை காலத்தில் தமிழக முதல்வரால் வழங்கப்படும் உதவித்தொகை பேருதவியாக உள்ளது என்றனர்.

**குமரி மாவட்டத்தில் மங்குஸ்தான் பழ சீசன் தொடங்கியது**

குமரி மாவட்டத்தில் மங்குஸ்தான் பழ சீசன் தொடங்கியுள்ளதையடுத்து, இப்பழங்கள் சந்தைகளில் விற்பனைக்கு வந்துள்ளன.

மாவட்டத்தில் காமதேனு, பெதனி, ஓமனாபுரம், சக்கரபாணி, வைகுண்டம், ஆறுகாணி, பேச்சிப்பாறை, வேளிமலை உள்ளிட்ட இடங்களில் மங்குஸ்தான் மரங்கள் நடவு செய்யப்பட்டுள்ளன. இதுதவிர மலையோரப் பகுதிகளில் வீட்டுத் தோட்டங்களிலும் மங்குஸ்தான் மரங்கள் உள்ளன.

தற்போது மங்குஸ்தான் பழ சீசன் தொடங்கியுள்ளது. பழ வியாபாரிகள் தோட்டங்களில் நேரடியாகச் சென்று பழங்களை மொத்த விலைக்கு வாங்கி சந்தைகளில் பழங்கள் விற்பனை செய்யும் வணிகர்களிடம் மறு விற்பனை செய்து வருகின்றனர்.

குலசேகரம் சந்தையில் மங்குஸ்தான் பழங்கள் கிலோ ரூ. 180-க்கு விற்பனை செய்யப்பட்டது.

குரங்குகளால் அழிவு: இதனிடையே, மாவட்டத்தில் மலையோரப் பகுதிகளில் குரங்குகளிடமிருந்து பழங்களைக் காப்பது விவசாயிகளுக்கு பெரும் சவாலாகவே உள்ளது. மங்குஸ்தான் உள்ளிட்ட கூடுதலாக விலை போகும் பழங்களை குரங்குகள் அதிகமாக தின்று விடுவதாகவும், இதனால் தங்களுக்கு அதிக இழப்பு ஏற்படுவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## திருமானூரில் தோட்டக்கலை திட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி



திருமானூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில், தோட்டக்கலை மற்றும் மலை பயிர்கள் துறையின் சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கம் 2015-16-ம் ஆண்டுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு தோட்டக்கலை துணை இயக்குனர் கணேசன் தலைமை தாங்கி விவசாயிகள் தெரிவித்த திட்டங்களை கேட்டறிந்து பதிவு செய்தார். தோட்டக்கலை துறையின் மூலம் அரசு வழங்கும் திட்டங்களை பெற்று பயனடையுமாறு அவர் கேட்டு கொண்டார். நிகழ்ச்சியில் விவசாய தோட்டக்கலை அலுவலர் சரண்யா, உதவி வேளாண் அலுவலர் சேகர், பாஸ்கர், முருகேசன், தர்மராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த தோட்டக்கலை திட்ட விழிப்புணர்வு மேளாவில் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ள மரக்கன்றுகளை வன பாதுகாவலர் ஆய்வு**



பெரும்பாறை,

திண்டுககல் மாவட்டம் வத்தலககுண்டு–கன்னிவாடி வனச்சரகம், வன விரிவாகக மையத்தை சேர்ந்த வனத்துறை அதிகாரிகள் மூலம் கீழ்மலைப்பகுதியில் உள்ள மணலூர் ஊராட்சி மஞ்சள்பரப்பு கிராமத்தில் சுமார் 4 லட்சம் சில்வர் ஒக மரக்கன்றுகள் வளர்ககப்பட்டு வருகின்றன. இதனை தாண்டிககுடி, மங்களம்கொம்பு, காமனூர், மணலூர், பெரியூர், கே.சி.பட்டி, குப்பமாள்பட்டி, பன்றிமலை, ஆடலூர், போன்ற மலைககிராமங்களில் வசிப்பவர்களுக்கு அடுத்த மாதம் (ஆகஸ்டு) 15–ந்தேதி இலவசமாக வழங்க வனத்துறையினர் முடிவு செய்துள்ளனர்.

இந்த நிலையில் வனத்துறை சார்பில் வளர்க்கப்பட்டு வரும் மரக்கன்றுகளின் நிலை குறித்து மண்டல வன பாதுகாவலர் பருவா, வன அலுவலர் சம்பத் ஆகியோர் நேற்று ஆய்வு செய்தனர். இதில்

வனச்சரகர்கள் சி.கண்ணன், பார்த்தசாரதி, வனவர்கள் ராஜ், முகமதுதாஜ்தீன் உள்பட பலர் கலந்துகொண்டனர். இந்த மரக்கன்றுகளை பெற விரும்பும் விவசாயிகள் அடுத்த மாதம் முதல் வனத்துறையினரை அனுகலாம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் ரூ.74 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம்**



பெருந்துறை,

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.74 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் ஏலம் போனது.

கொப்பரை தேங்காய்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொப்பரை தேங்காய் சிறப்பு ஏலம் நடந்தது.

இந்த ஏலத்துக்கு சேலம், கிருஷ்ணகிரி, தர்மபுரி, நாமக்கல், திருப்பூர், ஈரோடு ஆகிய பகுதிகளில் இருந்து உற்பத்தியாளர்கள் கொப்பரை தேங்காயை கொண்டு வந்தனர்.மொத்தம் 2 ஆயிரத்து 108 மூட்டைகளில் 1 லட்சத்து 5 ஆயிரம் கிலோ எடைகொண்ட கொப்பரை தேங்காய் கொண்டு வரப்பட்டு இருந்தது.

ரூ.74 லட்சத்துக்கு விற்பனை

இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் 70 ரூபாய் முதல் 74 ரூபாய் 50 காசு வரை ஏலம் போனது. 2–ம் தரம் கொப்பரை தேங்காய் 50 ரூபாய் 15 காசு முதல் 69 ரூபாய் 25 காசு வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.74 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனை ஆனது.

கடந்த சனிக்கிழமை நடந்த ஏலத்தை விட கிலோவுக்கு ரூ.4 குறைந்து கொப்பரை தேங்காய் விற்பனை ஆனது. கேரளாவில் உள்ள எண்ணை நிறுவனம் கொப்பரை தேங்காயின் விலையை குறைத்து கொள்முதல் செய்ததால்தான் கொப்பரை தேங்காய் குறைந்து விலையில் விற்பனை ஆகி உள்ளது என்று கூட்டுறவு சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர்.

விருதுநகர், வெள்ளக்கோவில், காங்கயம், ஊத்துக்குளி, கோபிசெட்டிபாளையம், பழனி ஆகிய பகுதிகளில் இருந்து வந்த எண்ணை மில் முகவர்கள் கொப்பரை தேங்காயை வாங்கிச்சென்றனர்.

**ரசாயன உரத்தை பயன்படுத்தாமலேயே செழித்து வளர்ந்த உளுந்து-காய்கறி பயிர் இயற்கை விவசாயத்துக்கு புத்துயிர் கொடுத்து விவசாயி சாதனை**



சிங்கங்குளம் கிராமத்தில் ரசாயன உரத்தை பயன்படுத்தாமல் சாகுபடி செய்யப்பட்ட உளுந்து பயிர், புடலங்காய் கொடி வளர்ந்து இருப்பதை படத்தில் காணலாம்.

மன்னார்குடி அருகே ரசாயன உரத்தை பயன்படுத்தாமலேயே உளுந்து, காய்கறி பயிர்களை செழித்து வளர செய்து, இயற்கை விவசாயத்துக்கு புத்துயிர் கொடுத்து விவசாயி ஒருவர் சாதனை படைத்துள்ளார். பாரம்பரிய முறை விவசாயம்

திருவாரூர் மாவட்டத்தில் தற்போது குறுவை சாகுபடி தீவிரமாக நடைபெற்று வருகிறது. முன்னதாக கோடை பருவத்தையொட்டி சாகுபடி செய்யப்பட்ட பயறு வகை பயிர்கள் தற்போது நன்கு வளர்ந்து அறுவடைக்கு தயாராகி வருகின் றன. மன்னார்குடி, கோட்டூர் உள்ளிட்ட பகுதி களில் ஆண்டுதோறும் கோடை பருவத்தில் பயறு வகை பயிர்கள் அதிக அளவில் பயிரிடப் படும். பெரும்பாலும் ரசாயன உரத்தை பயன் படுத்தியே இப்பயிர்கள் வளர்க்கப்படும். ரசாயன உரத்தை பயன்படுத்தினால் மட்டுமே அதிக மகசூல் கிடைக்கும் என்ற நிலை உள் ளது. ஆனால் ரசாயன உரத்தை பயன்படுத்தி விளைவிக்கப்படும் நெல், உளுந்து மற்றும் காய்கறிகளால் உடல் நலனுக்கு தீங்கு ஏற்படும் என்றும், பயிருக்கு உயிர்ச்சத்து கொடுக்கும் தன்மையை மண் இழக்கும் என்றும் பரவலாக பேசப்படும் நிலையில், மன்னார்குடி அருகே உள்ள சிங்கங்குளம் கிராமத்தை சேர்ந்த விவசாயி செல்வராசு என்பவர் கடந்த 3 ஆண்டு களாக தனது 33 சென்ட் நிலத்தில் ரசாயன உரத்தை பயன்படுத்தாமல் பாரம்பரிய முறைப் படி உளுந்து பயிரை சாகுபடி செய்து இயற்கை விவசாயத்துக்கு புத்துயிர் கொடுத்து இருக் கிறார். செழித்து வளர்ந்த பயிர் இவர் தனது வயலில் முற்றிலும் தொழு உரம் அதாவது சாண உரத்தை மட்டுமே பயன்படுத்தி பயறு வகை பயிர்களையும், காய்கறிகளையும் விளைவித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. ரசாயன உரத்தை பயன்படுத்தாமலேயே இந்த உளுந்து பயிர்கள் மாறி, மாறி வரும் மழை, வெயிலை தாக்குப்பிடித்து செழித்து வளர்ந்து பசுமையுடன் காட்சி அளிக்கின்றன.

இதுபற்றி விவசாயி செல்வராசு "தினத்தந்தி" நிருபரிடம் கூறியதாவது:- கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு வரை ரசாயன உரத்தை தான் பயன்படுத்தி வந்தேன். இதன் காரணமாக மண்ணின் தன்மை மாறியது. இதை கவனித்து வந்த நான் பழைய பாரம்பரிய முறைப்படி விவசாயம் செய்ய முடிவு செய்து, தொழு உரத்தை பயன்படுத்தி வருகிறேன். தொழு உரத்தை பயன்படுத்தி கடந்த சில ஆண்டுகளாக 75 நாள் வயதுடைய பயறு வகை பயிர்களை சாகுபடி செய்து வருகிறேன். இந்த ஆண்டு சாகுபடி செய்யப்பட்ட உளுந்து பயிர் 45 நாட்களிலேயே நல்ல முதிர்ச்சியுடன் காணப் படுகிறது. இதேபோல பயறு வகை பயிர்களை போல புடலங்காய் உள்ளிட்ட காய்கறிகளையும் சாகுபடி செய்கிறேன். இயற்கை முறையை பின்பற்றி விளைவிக்கப்படும் காய்கறிகள் ரசா யன முறையில் விளைவிக்கப்படும் காய்கறிகளை விட நல்ல நிலையில் காட்சி அளிக்கின்றன. இவ்வாறு அவர் கூறினார்.மன்னார்குடி பகுதியில் நடைபெறும் இயற்கை விவசாயம் குறித்து வேளாண்மை விரிவாக்க அலுவலர் பாலமுருகன் கூறியதாவது:வருமானம் பெறலாம் ஒரு ஏக்கர் நிலத்துக்கு 4 மினிவேன் அளவுள்ள தொழு உரத்தை மட்டுமே பயன்படுத்தி விவ சாயி செல்வராசு உளுந்து, பயறு மற்றும் காய்கறிகளை பயரிட்டுள்ளார். எந்தவித ரசாயன உரங்களையும் அவர் பயன்படுத்தவில்லை. இதன் காரணமாக பயறு, மற்றும் புடலங்காய் கொடி மிகவும் செழிப்பாகவும், வனப்பாகவும் காணப்படுகிறது. இதை பின்பற்றி மற்ற விவசாயி களும் கோடை பருவத்தில் இயற்கை முறைப்படி சாகுபடி செய்து வருமானம் பெறலாம். இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

**காவிரி நீர்பிடிப்பில் மழை குறைந்தது**

பெங்களூரு: கர்நாடக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை குறைந்துள்ளதால், தமிழகத்திற்கு திறக்கப்படும் தண்ணீர் 5 ஆயிரம் கனஅடியாக குறைந்தது. கர்நாடக மாநிலம் காவிரி டெல்டா பகுதியில் கடந்த இரண்டு நாட்களாக மழை குறைந்துள்ளது. அதன் காரணமாக கே.ஆர்.எஸ்., கபினி, ஹாரங்கி, ஹேமாவதி அணைகளுக்கு நீர்வரத்து குறைந்துள்ளது.

கே.ஆர்.எஸ். அணைக்கு நேற்று மாலை நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 12 ஆயிரத்து 287 கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. அணையின் நீர்மட்டமும் உயர்ந்து 108.10 அடியாக இருந்தது. மொத்தம் 2,284 அடி உயரமுள்ள கபினி அணை அதன் முழு கொள்ளளவை எட்டியுள்ளது. அணைக்கு வினாடிக்கு 5 ஆயிரம் கன அடி தண்ணீர் வந்து கொண்டுள்ளது. அது முழுவதுமாக தமிழகத்திற்கு திறக்கப்பட்டுள்ளது.

**விலை குறைவால் வருந்த வேண்டாம், பழம், காய்கறிகளை இனி ஆன்-லைனில் விற்கலாம்**

புதுடெல்லி: விவசாயிகள் தாங்கள் விளைவித்த காய்றிகள், பழங்களுக்கு உரியவிலை கிடைக்காமல் இனி கவலைப்படத் தேவையில்லை. ஏனென்றால், இனி பழம், காய்கறிகளை ஆன்-லைனில் விற்கவோ, வாங்கவோ அரசு முறைப்படி அனுமதி அளித்துள்ளது. இதற்காக ஆன்-லைன் தேசிய வேளாண் சந்தையை உருவாக்க மத்திய அமைச்சரவை

நேற்று ஒப்புதல் அளித்துள்ளது. நாட்டில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் தங்களின் வேளாண் விளைபொருட்களை மொத்த மற்றும் சில்லரை சந்தைகள், மண்டிகள், சந்தைக் குழுக்களில் மட்டுமே சென்று விற்பதுதான் ஒரே வழியாக இருந்தது. இது சில நேரங்களில் அபரிமித விளைச்சலால் காய்கறி, பழங்களுக்கு உரியவிலை கிடைக்காமல் விவசாயிகள் நஷ்டமடையும் நிலையும் ஏற்படுவதுண்டு. இதைப் போக்க தேசிய வேளாண் சந்தை ஆணையம் ஆன் லைனில் வேளாண் சந்தையை உருவாக்கும் திட்டத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த திட்டத்தின் மூலம், ஆன்-லைனில் விவசாயிகள் தங்களை பதிவு செய்து கொண்டு, நாடு முழுவதும் உள்ள வேளாண் பொருட்களை விற்கவோ, கொள்முதல் செய்யவோ முடியும். இந்த ஆன்-லைன் தேசிய வேளாண் சந்தை ஏற்படுத்த பிரதமர் மோடி தலைமையிலான அமைச்சரவைக் குழு நேற்று அனுமதி அளித்துள்ளதாக அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. வெளிநாடுகளில் வேளாண் பொருட்களை எளிதாக விற்பனை மற்றும் கொள்முதல் செய்யவும், பணப் பரிமாற்றத்தை ஒழுங்குபடுத்தவும், தேசிய வேளாண் சந்தை ஆணையம் முடிவு செய்துள்ளது. மேலும், ஏற்றுமதியை ஊக்கப்படுத்தவும், வேளாண் பொருட்களை பாதுகாக்க சேமிப்பு கிடங்குகள் அமைக்கவும், ஆன்-லைன் கொள்முதல் வசதிகளை உருவாக்கவும் ஆணையம் தீவிரம் காட்டிவருகிறது. அரசின் இந்த முயற்சியால் விவசாயிகள் தங்கள் பொருட்களை நேரடியாக மண்டிகளிலும் விற்கலாம் அல்லது ஆன்-லைனில் விற்பனை செய்து உரியவருக்கு பொருட்களை மாற்றிவிடலாம். இதன் மூலம் விவசாயிகளின் வருவாய் உயரும், அனைத்து வேளாண் பொருட்களும் தடையின்றி கிடைக்கும்.

**நிரம்புகிறது பைக்காரா அணை படகு சவாரி இனி எளிமை**

ஊட்டி, : ஊட்டி அருகேயுள்ள பைக்காரா அணையில் தண்ணீர் அளவு உயர்ந்துள்ளதால், படகு சவாரி செய்யும் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஊட்டி அருகேயுள்ள பைக்காரா அணையில் சுற்றுலாத்துறை மூலம் படகு சவாரி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இயற்கை எழில் கொஞ்சும் மலைகளின் நடுவே கடல் போல் அலைகளுடன் காட்சியளிக்கும் இந்த அணையில் படகு சவாரி செய்ய சுற்றுலா பயணிகள் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்நிலையில், கோடை சீசனின் போது, மின் உற்பத்திக்காக இந்த அணையில் இருந்த தண்ணீரை மின் வாரியம் எடுத்தது. இதனால், அணையின் நீர்மட்டம் மிகவும் தாழ்வான பகுதிக்கு சென்றது. இதனால், படகு சவாரி செய்ய சுமார் 100 படி இறங்கி சென்றால் மட்டுமே படகு சவாரி செய்ய முடியும் என்ற நிலை உருவானது. இதனால், வயதானவர்கள், உடல் பருமனானவர்கள் படகு சவாரி செய்ய முடியாமல் தவித்தனர். தாழ்வான பகுதிக்கு சென்று படகு சவாரி செய்வதையும் சில சுற்றுலா பயணிகள் தவிர்த்து வந்தனர். இந்நிலையில், கடந்த மாதம் முக்குருத்தி, பார்சன்ஸ்வேலி, போர்த்திமந்து மற்றும் பைக்காரா போன்ற நீர் பிடிப்பு பகுதியில் தொடர்ந்து 10 நாட்களுக்கு மேலாக மழை கொட்டித் தீர்த்தது.இதனால், இப்பகுதிகளில் இருந்த பைக்காரா அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரித்தது. தற்போது, பைக்காரா அணையில் தண்ணீர் அளவு வேகமாக உயர்ந்து வருகிறது. படகு சவாரி செய்ய பயணச்சீட்டு வாங்கும் கவுன்டரின் மிக அருகில் தண்ணீர் வந்துவிட்டது. ஒரு சில படிகள் மட்டுமே இறங்கினால், எளிதாக படகு நிறுத்தும் இடத்திற்கு சென்று விடலாம். இதனால், பைக்காரா அணையில் படகு சவாரி செய்யும் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். அதே சமயம், அணையில் தண்ணீர் அளவு வேகமாக அதிகரித்து வருவதால்,

மின் உற்பத்தியும் அதிகரிக்க வாய்ப்புள்ளதால், மின் வாரிய அதிகாரிகளும் மகிழ்ச்சியில் உள்ளனர்.

**தென்மேற்கு பருவமழைசிறுவாணி நீர்மட்டம் 9 மீட்டர் உயர்வு**

கோவை, : தென்மேற்கு பருவமழையின் காரணமாக சிறுவாணி அணையின் நீர்மட்டம் 9 மீட்டர் உயர்ந்து 874.35மீ என்ற அளவை எட்டியுள்ளது. மேற்குதொடர்ச்சி மலைப்பகுதியில் உள்ள சிறுவாணி அணையின் நீர் தேக்க அளவு 15மீட்டர். அதாவது கடல் மட்ட உயரம் கணக்கின்படி 878.50மீட்டர். இப்பகுதியில் கடந்த 19ம் தேதி முதல் தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்து வந்தது. அணையின் அடிவாரம் மற்றும் மீன்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்தது. இந்த பருவமழையினால் அணையின் நீர் மட்டம் வேகமாக உயர்ந்தது. கடந்த 11 நாட்களில் சிறுவாணி அணைப்பகுதியில் 700 மி.மீ மழை பதிவாகியுள்ளது. இதனால், அணையின் நீர்மட்டம் 9 மீட்டர் வரை உயர்ந்து 874.35மீ என்ற அளவை எட்டியுள்ளது. நேற்று அணைப்பகுதியில் மழை பெய்யவில்லை. அணையில் இருந்து 91.50 எம்எல்டி தண்ணீர் எடுக்கப்பட்டு வருகிறது. மீண்டும் கனமழை தொடர்ந்து பெய்தால் அணை நிரம்ப வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**வேளாண். பல்கலையில்_ பட்டம் பெற்ற 155 விவசாயிகள்**

கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தில் நேற்று நடைபெற்ற 45-வது நிறுவன நாள் மற்றும் தொலைதூர கல்வி பட்டத் தகுதி பெறும் விழாவில் 155 விவசாயி கள் பட்டம் பெற்றனர்.

உலகிலேயே முதல் முறையாக விவசாயிகளும் படித்து பட்டம் பெறும் வகையில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் அறிமுகப்படுத்தியுள்ள இளநிலை பண்ணைத் தொழில் நுட்பப் பட்டப் படிப்பில் (பி.எப்.டெக்) விவசாயிகள் பட்டம் பெற்றுள்ளனர்.

விழாவுக்கு ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் தலைமை வகித்தார். பல்கலைக்கழக பதிவாளர் கு.ரா.ஆனந்தகுமார் வரவேற்றார். மேயர் பா.ராஜ்கு மார் வாழ்த்துரை வழங்கினார். தொலைத்தூரக் கல்வி மைய இயக்குநர் பி.சாந்தி கூறும்போது, 'உலகிலேயே முதல் முறையாக வேளாண் பல்கலை யில் அறிமுகமாகியுள்ள இந்த பட்டப்படிப்பில், 1250 பேர் கல்வி பயின்று வருகின்றனர். 155 பேர் பட்டதாரிகளாக தகுதிச் சான்றிதழ் பெற்றுள் ளனர். விவசாயிகளை தொழில் முனைவோர்களாகவும், பட்டம் பெற்றவர்களாகவும் முன்னேற்ற மடையச் செய்வதே இதன் நோக்கம். 6 பருவங்கள், 120 நேர்முகப் பயிற்சிகள் என 3 ஆண்டு பாடத்திட்டமாக இது உள்ளது. எளியமுறையில் கற்றுக் கொடுக்கப்படுகிறது' என்றார்.